# போட்டி

தற்காப்பு கலைகளாக இருந்து விளையாட்டாக மாறிய நிறைய கலைகள் இன்று உலகப்புகழ் பெற்றுள்ளன. உலகப்புகழ் பெற்ற கலைகளின் அனைத்து அம்சங்களும் உள்ளடக்கப்பட்டுள்ள, சேஃப்டி நூன்சாக்கானது, அந்த வரிசையில் தற்பொழுது அடியெடுத்து வைத்துள்ளது.

சேஃப்டி நூன்சாக்கில் கத்தா, (குழு) டீம் கத்தா, குமித்தே, டீம் குமித்தே மற்றும் 'தனக்கான பாணி' (ஓன் ஸ்டையில்) போன்ற 5 வகையான போட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளது. இம்முறைகளில் மாணவர்களின் முழுத்திறமையையும் வெளிப்படுத்தி தங்களை மேம்படுத்தி உலக அரங்கில் சாதனை படைக்க மாபெரும் வாய்ப்பு காத்துக்கொண்டிருக்கிறது.

விளையாட்டாக அங்கீகரிக்கப்பட்ட கலைகளில் உள்ளது போன்றே அனைத்து வரையறைகளும், வழிமுறைகளும், விதி முறைகளும் சேஃப்டி நூன்சாக்கு போட்டிகளில் உருவாக்கப்பட்டுள்ளதால், இந்த கலை புதிய தற்காப்பு கலைகளை வரவேற்கும் ஆர்வமிகுந்த தற்காப்புகலைஞர்கள், விளையாட்டு ஆர்வலர்கள், மாணவ, மாணவியர் மற்றும் மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. மேலும், "ஸ்போர்ட்ஸ்" ஆக மாறுவதற் குரிய அனைத்து சட்ட திட்டங்களும் உருவாக்ப்பட்டுள்ளதால், வெகு விரைவில், இவ்வுலகில் சேஃப்டி நூன் சாக்கானது, "ஸ்போர்ட்ஸ்" ஆக புகழ் பரப்பும் காலம் வெகு தூரத்தில் இல்லை எனலாம்.

## தனிநபர் கத்தா விதிகள்

1. போட்டி களம்
2. அதிகாரப்பூர்வமான உடை
3. சேஃப்டி நூன்சாக்கு
4. சேஃப்டி நூன்சாக்கு பாஸ்புக்
5. சேஃப்டி நூன்சாக்கு அளவுகளும் பயன்படுத்தும் போட்டியாளரும்
6. கத்தாக்களின் அட்டவணை
7. தனி நபர் கத்தா போட்டி ஏற்பாடு செய்தல்
8. ஜட்ஜிங் பேனல் (நீதிபதிகள் குழு)
9. தீர்ப்பளிக்க தேவையான அளவைகள்.
10. போட்டியாளர்களுக்கான விதிகள்
11. போட்டியாளரின் மதிப்பெண் கணக்கெடுக்கும் முறை
12. தண்டனைகள் -- போட்டியாளருக்கு மதிப்பெண் குறைக்கும் முறை
13. தண்டனைகள் -- போட்டியாளரை தகுதி நீக்கம் செய்யும் முறை
14. அதிகாரப்பூர்வமான ஆட்சேபனை

# தனிநபர் -- கத்தா விதிகள்

## அத்தியாயம் 1. கத்தா போட்டி களம்.

1. குமித்தே போட்டிற்கு உள்ள அதே போட்டி களம் கத்தா போட்டிற்கும் பொருந்தும்.

## அத்தியாயம் 2. அதிகாரப்பூர்வமான உடை

1. குமித்தே போட்டியின் போது, போட்டியாளர்கள் பயன் படுத்தும் அதே உடை, கத்தா போட்டிற்கும் பொருந்தும்.

2. சரியான சேஃப்டி நூன்சாக்கு உடை அணியாமல் வரும் போட்டியாளர் தம்மை சரி செய்து கொள்வதற்கு 1 நிமிடம் கால அவகாசம் கொடுக்கப்படும்.

3. மேற்கண்ட அதிகாரப்பூர்வமான, சேஃப்டி நூன்சாக்கு உடையை அணியாதவர், போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்.

## அத்தியாயம் 3. சேஃப்டி நூன்சாக்கு

1. SNWF ஆல் அங்கீகரிக்கப்பட்ட (அக்கா) சிகப்பு மற்றும் (அவோ) நீல நிற, சேஃப்டி நூன்சாக்குகளையே, பயன்படுத்த அனுமதிக்கப்படும்.

2. சேஃப்டி நூன்சாக்கானது எந்தவித குறைபாடும் இல்லாமல், புதிய சேஃப்டி நூன்சாக்காகவே இருக்க வேண்டும். சேஃப்டி நூன்சாக்கின் இரண்டு பகுதிகளின் நடுவில் உள்ள கயிரானது 15 செ.மீ. நீளத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

3. போட்டியின் போது, சேஃப்டி நூன்சாக்கு பழுது ஏற்ப்பட்டால், உடனே மற்றொரு சேஃப்டி நூன்சாக்கை 1 நிமிடத்தில் அதே நிறத்தில் கொண்டுவர கால அவகாசம் கொடுக்கப்படும்.

*( எதிர்பாராமல் தேவைப்படும் சேஃப்டி நூன்சாக்கு : போட்டியாளர், போட்டியின் போது, மற்றொரு சரியான சேஃப்டி நூன்சாக்குவை, தேவைப்படும்போது, உடனே எடுத்துவரும்படி, அருகாமையில் (கோச் இடம்) கொடுத்து வைத்திருக்க வேண்டும் )*

## அத்தியாயம் 4. சேஃப்டி நூன்சாக்கு பாஸ்புக்

சேஃப்டி நூன்சாக்குவிற்கு அதிகாரப்பூர்வமான ஆவணம் "சேஃப்டி நூன்சாக்கு மாணவர் பாஸ்புக் " ஆகும். ஒவ்வொரு அங்கீகாரம் பெற்ற போட்டியின் போதும், SNWF ஆல் வழங்கப்பட்ட பாஸ்புக் இல்லாமல் போட்டியில் பங்கு கொள்ள முடியாது. சேஃப்டி நூன்சாக்கு பாஸ்புக் கீழ்க்கண்ட முறையில் இருந்தால் தான் செல்லத்தக்கதாக ஏற்றுக் கொள்ளப்படும் :

1. SNWF ஆல் வழங்கப்பட்ட, அதிகாரப்பூர்வமான, காலாவதி ஆகாத பாஸ்புக்காக இருக்க வேண்டும்.

2. தொழில் நுட்ப டைரக்டருனுடைய, கையொப்பமுடன், அதிகாரப்பூர்வமான முத்திரை பதித்திருத்தல் வேண்டும்.

3. ஒவ்வொரு முறை பெல்ட் தேர்வு, போட்டியில் பெற்ற வெற்றிகள், ஜட்ஜ் தேர்வு, ரெஃப்ரி தேர்வு, செமினார்கள் மற்ற அனைத்து விபரங்களும், அதில் பதிவு செய்து இருத்தல் வேண்டும்.

4. சேஃப்டி நூன்சாக்கு பாஸ்புக் இல்லாமல், போட்டியில், பெல்ட் தேர்வில், ஜட்ஜ் மற்றும் ரெஃப்ரி தேர்வில் சேஃப்டி நூன்சாக்கு செமினாரில் கலந்து கொள்ள அனுமதியில்லை.

5. சேஃப்டி நூன்சாக்கு பாஸ்புக் தொலைந்தாலோ அல்லது பழுதடைந்தாலோ, அதிகாரப்பூர்வமிக்க அதிகாரியின் பரிந்துரையின் பேரில் அதற்குரிய கட்டணத்தை செலுத்தி, புதிய "சேஃப்டி நூன்சாக்கு பாஸ்புக்" பெற வேண்டும்.

*( அனுபந்தம் 8ல் சேஃப்டி நூன்சாக்கு பாஸ்புக் அறிமுகம் என்ற தலைப்பில் "சேஃப்டி நூன்சாக்கு அதிகாரி பாஸ்புக் மற்றும் சேஃப்டி நூன்சாக்கு மாணவர் பாஸ்போர்ட்" விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது )*

## அத்தியாயம் 5. சேஃப்டி நூன்சாக்கு அளவுகளும் பயன்படுத்தும் போட்டியாளரும்.

1. 1.50 மீட்டர் உயரமும் அதற்கு கீழே உயரம் உள்ள சிறுவர்கள் பயன்படுத்தக்கூடிய சேஃப்டி நூன்சாக்கானது, 25 செ.மீ. (9.8 அங்குலத்தில்) நீளத்தில் இருக்க வேண்டும்.

2. 1.65 மீட்டர் உயரம் உள்ள ஜுனியர்கள் பயன்படுத்தக்கூடிய சேஃப்டி நூன்சாக்கானது, 30 செ.மீ. (11.9 அங்குலத்தில்) நீளத்தில் இருக்க வேண்டும்.

3. 1.65 மீட்டருக்கு மேல் உயரம் உள்ள சீனியர்கள் பயன்படுத்தக்கூடிய சேஃப்டி நூன்சாக்கானது 36 செ.மீ. (14.2 அங்குலத்தில்) நீளத்தில் இருக்க வேண்டும்.

## அத்தியாயம் 6. கத்தாக்களின் அட்டவணை

சேஃப்டி நூன்சாக்கு கிராண்ட் மாஸ்டரும், உலக சேஃப்டி நூன்சாக்கு சம்மேளனத்தின் தொழில் நுட்ப டைரக்டருமான எஸ். கோதண்டன் அவர்களால் உருவாக்கப்பட்டு, SNWF ஆல் அங்கீகரிக்கப்பட்ட கத்தாக்களின் அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### ஆரம்ப கத்தா

1. முருகு
2. தியாகி விஸ்வநாததாஸ்
3. செல்வா
4. செந்தா

### அடிப்படை கத்தா

1. விநாயகா
2. ஜெயா
3. கோவிந்த்
4. வசந்தி

### மேம்பட்ட கத்தா

1. பிரகாஷ்
2. வாங்
3. இஜி ஒகசஹரா
4. மணி
5. இம்தியாஸ்
6. சுமன்
7. பாலா
8. வெங்கட்

*( அனுபந்தம் 9ல் சேஃப்டி நூன்சாக்கு கத்தாக்களின் அட்டவணையில் ஒவ்வொரு கத்தாவிற்கு பெயர் வைத்த விதம் பற்றியும் அதன் விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளது )*

## அத்தியாயம் 7. தனி நபர் கத்தா போட்டி ஏற்பாடு செய்தல்

1. கத்தா போட்டி என்பது தனிநபர் மேட்ச் ஆகவும், டீம் மேட்ச் ஆகவும் இருக்கும்.

2. தனி நபர் கத்தா போட்டி ஆண்கள் பிரிவுக்கும், பெண்கள் பிரிவுக்கும் தனித்தனியாக நடைபெறும்.

3. கத்தா போட்டியில், சேஃப்டி நூன்சாக்கு கிராண்ட் மாஸ்டர் சொஷிஹான் எஸ். கோதண்டன் அவர்களால் உருவாக்கப்பட்டு, SNWF ஆல் அங்கீகரிக்கப்பட்ட, அத்தியாயம் 6ல் கண்ட அட்டவணையில் உள்ள, கத்தாக்களை மட்டுமே செய்ய வேண்டும். கத்தாக்களில் மாற்றங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

4. போட்டியாளர்களின் பெல்ட்டிற்கு ஏற்ப, உயரத்திற்கு ஏற்ப, SNWFஆல் அங்கீகரிக்கப்பட்ட, அட்டவணையில் உள்ள கத்தாக்களில் இருந்து தான் போட்டியில் கத்தாக்கள் செய்ய வேண்டும்.

5. சுற்று ஆரம்பிக்கும் முன்னரே, தேர்ந்தெடுத்துள்ள கத்தாவை, ஸ்கோர் டேபிளில் தெரிவிக்க வேண்டும்.

6. போட்டியாளர்கள் ஒவ்வொரு சுற்றிலும், வெவ்வேறு கத்தாவை செய்ய வேண்டும்.

7. சேஃப்டி நூன்சாக்கு கத்தா என்பது நடனமோ அல்லது ஸ்டெயிலாக சுற்றும் நிலையோ அல்ல. செய்யும் கத்தா, மற்றும் டெக்னிக் இயற்கையாக சண்டையிடுதலாகவும், சக்தியுடனும் மற்றும் சாத்தியமான பயனளிக்கும் வகையிலும், கத்தா இருத்தல் வேண்டும்.

8. போட்டியாளர் கத்தாவின் பெயரை கூறிய உடன், ரெஃப்ரி, விசில் மூலம் ஒலியை எழுப்பிய பிறகு, போட்டியாளர் கத்தா ஆரம்பிக்க வேண்டும்.

9. போட்டியாளர் கத்தா முடித்த உடன், மதிப்பெண்ணிற்காக, கத்தா தொடங்கிய இடத்தில் நிற்க வேண்டும். மதிப்பெண் அறிவித்த உடன், ரெஃப்ரிக்கு, (‘போ’) குனிந்து இரு கைகளில் சேஃப்டி நூன்சாக்குவை பிடித்தபடி, இரு கைகளை கூப்பி வணக்கம் செய்துவிட்டு அந்த இடத்தை விட்டு செல்ல வேண்டும்.

## அத்தியாயம் 8. ஜட்ஜிங் பேனல் (நீதிபதிகள் குழு)

1. ஒவ்வொரு மேட்ச்சிற்கும் ஒரு ரெஃப்ரி மற்றும் நான்கு ஜட்ஜுகளைக் கொண்ட பேனல் இருக்கும்.

2. ரெஃப்ரி, போட்டிகளத்தின் வெளியே, போட்டியாளர்களை நோக்கி அமர்ந்திருப்பார்.

3. மற்ற நான்கு ஜட்ஜுகளும், நான்கு மூலைகளில் போட்டிகளத்தின் வெளியே அமர்ந்திருப்பர். ஐவரும் தங்கள் கையில் ஸ்கோர் போர்டை வைத்திருப்பர்.

4. அதிகாரப்பூர்வமான புள்ளிகள் அறிவிக்கும் மேஜையில், ஸ்கோர்கீப்பர், டைம்கீப்பர் மற்றும் ஸ்கோர் சூப்பர்வைஸர் அமர்ந்திருப்பர்.

## அத்தியாயம் 9. தீர்ப்பளிக்க தேவையான அளவைகள்.

1. கத்தாவின் அடிப்படை மற்றும், டெக்னிக்கை புரிந்து கத்தா செய்தல் வேண்டும்.

2. சேஃப்டி நூன்சாக்கு கிரிப், பிளாக், கேட்ச், சுவிங், பஞ்ச், ஸ்டைரைக், ஸ்பின், சாப், டைரக்ஷன், கண்பார்வை, ஸ்டான்ஸ், ரோல், சர்கிள், ப்லிப் போன்றவைகள், போட்டியாளரின் கட்டுப்பாட்டில், இருக்க வேண்டும்.

3. குட் டைமிங் (சரியான நேரம்), ரிதம் (ஒழுங்கு), ஸ்பீட் (வேகம்), பேலன்ஸ் (நிதானம்) மற்றும் போகஸ் ஆப் பவர் ( சக்தியை ஒருமைப்படுத்ததல்), இவைகள் அனைத்தையும் ஒன்று கூடிய சேஃப்டி நூன்சாக்கானது, போட்டியாளரின் கட்டுப்பாட்டிற்குள் இருத்தல் வேண்டும்.

4. சரியான ஒன்று சேர்ந்த கவனமும், விறைப்பான கால்களுடன் சரியான ஸ்டான்ஸ், தரையில் பதிந்து இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் 10. போட்டியாளர்களுக்கான விதிகள்

1. ஒவ்வொரு சேஃப்டி நூன்சாக்கு போட்டியின் போது, அதிகாரப்பூர்வமான புள்ளிகள் அறிவிக்கும் மேஜையில், உள்ள ஸ்கோர் சூப்பர்வைஸர், போட்டியாளர்களை, அகா மற்றும் அவோ வரிசையில் அமர வைப்பார். அவரிடம், “சேஃப்டி நூன்சாக்கு மாணவர் பாஸ்புக்கை”ஐ, ஒப்படைக்க வேண்டும். போட்டி முடிந்தபிறகு “சேஃப்டி நூன்சாக்கு மாணவர் பாஸ்புக்கை”ஐ, ஸ்கோர் சூப்பர்வைஸரிடம் இருந்து வாங்கிச்செல்ல வேண்டியது ஒவ்வொரு போட்டியாளரின் பொறுப்பாகும்.

2. தனி நபர் கத்தா, ஒவ்வொரு சுற்று ஆரம்பத்திலும், போட்டியாளர்கள் ஸ்கோர் டேபிளிற்கு சென்று தாங்கள் செய்யப்போகும் கத்தாவின் பெயரை கூறிவிட்டு, போட்டி களத்தின் மத்தியில் உள்ள கோட்டில், ரெஃரியை நோக்கி நிற்க வேண்டும். ரெஃப்ரி விசில் மூலம் ஒலியை எழுப்பிய உடன் அட்டவணையில் உள்ள கத்தாக்களில், பெல்டிற்கேற்ப ஒன்றின் பெயரை அறிவித்து, கத்தாவை ஆரம்பிக்க வேண்டும்.

3. போட்டியாளர் கத்தா செய்து முடித்த உடன், ரெஃப்ரி, இருமுறை நீண்ட ஒலிகளை விசில் மூலம் எழுப்பிய உடன், ரெஃப்ரி மற்றும் நான்கு ஜட்ஜுகளும் ஒரே நேரத்தில் அவர்களுடைய மதிப்பெண்களை, உயர்த்துவர்.

4. அடுத்து ரெஃப்ரி விசில் மூலம் குட்டையான ஒலி எழுப்புவார். அதன் பிறகு மதிப்பெண் ரெஃப்ரி மற்றும் நான்கு ஜட்ஜுகளும், பலகைகளை தாழ்த்துவர்.

5. கத்தா விதிகளை அனுசரித்து கத்தா செய்யாவிட்டால் அல்லது வேறு ஏதாவது குறைகள் இருந்தால், ரெஃப்ரி மற்ற ஜட்ஜுகளை முடிவு எடுக்கும் பொருட்டு அழைப்பார்.

6. ஸ்கோர் டேபிளில் உள்ள ஸ்கோர் அறிவிப்பாளர் சராசரியான ஸ்கோரை, கணக்கெடுக்கும் முறைப்படி, போட்டியாளர் எடுத்த ஸ்கோரை அறிவிப்பார்.

## அத்தியாயம் 11. போட்டியாளரின் மதிப்பெண் கணக்கெடுக்கும் முறை

1. போட்டியாளர்கள் 8 பேருக்குள் இருந்தால், ஒரே ரவுண்டாக, 7மதிப்பெண்ணிலிருந்து 9 மதிப்பெண்ணிற்குள், மதிப்பெண்கள் அளிக்கப்படும்.

2. 8 போட்டியாளர்களுக்கு மேல் 16 போட்டியாளர்களுக்குள் இருந்தால், இரண்டு ரவுண்டாக போட்டி நடத்தப்படும். முதல் ரவுண்டு, 6மதிப்பெண்ணிலிருந்து 8மதிப்பெண்ணிற்குள்ளும், 2வது ரவுண்டு, 7மதிப்பெண்ணிலிருந்து 9 மதிப்பெண்ணிற்குள்ளும், மதிப்பெண்கள் அளிக்கப்படும்.

3. போட்டியாளர்கள் 32 பேருக்குள் இருந்தால் மூன்று ரவுண்டாக, முதல் ரவுண்ட் 5 மதிப்பெண்ணிலிருந்துலிருந்து 7மதிப்பெண்ணிற்குள்ளும், 2வது ரவுண்டு 6 மதிப்பெண்ணிலிருந்து 8 மதிப்பெண்ணிற்குள்ளும், 3வது ரவுண்டு 7மதிப்பெண்ணிலிருந்து 9 மதிப்பெண்ணிற்குள்ளும், மதிப்பெண்கள் அளிக்கப்படும்.

4. போட்டியாளர் கத்தா செய்து முடித்த உடன், ரெஃப்ரியும் மற்றும் நான்கு ஜட்ஜுகளும், தாங்கள் அளிக்கும் மதிப்பெண்களை, உயர்த்தி பிடிக்கும் போது, அறிவிப்பாளர், ஸ்கோர்களை, அனைவருக்கும் கேட்கும்படி, சத்தமாக படிப்பார். போட்டியாளர் பெற்ற மதிப்பெண்களில் அதிக மதிப்பெண்ணையும், குறைந்த மதிப்பெண்ணையும் கழித்து விட்டு, மற்ற மூன்று மதிப்பெண்களையும் கூட்டி, அறிவிப்பார். இந்த மதிப்பெண்ணே, போட்டியாளர் பெற்ற மதிப்பெண்ணாகும்.

5. அதிக மதிப்பெண் எடுத்த முதல் நான்கு பேருக்கும் முறையே தங்கம், வெள்ளி மற்றும் 2 வெண்கலப்பதக்கங்கள் வழங்கப்படும்.

6. அதிக மதிப்பெண் எடுத்த முதல் நான்கு போட்டியாளர்களில், இருவர் ஒரே மாதிரியான அதாவது சமமான மதிப்பெண்களை எடுத்தால், அந்த போட்டியாளர்கள் மறுபடியும் வேறு ஒரு கத்தா செய்து தங்களுடைய திறமையை வெளிப்படுத்தி பதக்கம் பெற வேண்டும்.

7. மறுபடியும், இருவரும், சமமான மதிப்பெண்கள் எடுத்தால், முதல் ரவுண்ட் செய்த கத்தாவில் பெற்ற மொத்த மதிப்பெண்கள், 2வது ரவுண்ட் செய்த கத்தாவில் பெற்ற மொத்த மதிப்பெண்கள் இரண்டையும் கூட்ட வேண்டும். அதில் யாருக்கு அதிக மதிப்பெண்கள் வருகிறதோ அவரே பதக்கம் பெற தகுதியுடையவராவார். அதிலும், சமமான, மதிப்பெண்களே பெற்றால், 'அந்தே' முறையில், ரெஃப்ரியும், 4 ஜட்ஜுகளும் ஓட்டளிக்க வேண்டும். அதில் யார் அதிகமான ஓட்டுக்கள் பெறுகிறார்களோ அவர்களே பதக்கம் பெற தகுதியுடைவராவார்.

## அத்தியாயம் 12. தண்டனைகள் -- போட்டியாளருக்கு மதிப்பெண் குறைக்கும் முறை

1. போட்டியாளர் எந்த கையில் இருந்து, சேஃப்டி நூன்சாக்கு, கத்தாவை ஆரம்பிக்கிறாரோ, கத்தாவை முடிக்கும் போதும், சேஃப்டி நூன்சாக்கு அதே கையில் இருக்குமாறு கத்தாவை முடிக்க வேண்டும். இல்லையெனில் மதிப்பெண் குறைக்கப்படும்.

2. தனி நபர் கத்தா போட்டியில், போட்டியாளர், சேஃப்டி நூன்சாக்கு கிரிப், பிளாக், கேட்ச், சுவிங், பஞ்ச், ஸ்டைரைக், ஸ்பின், சாப், டைரக்ஷன், கண்பார்வை, ஸ்டான்ஸ், ரோல், சர்கிள், ப்லிப் போன்ற டெக்னிக்குகள் முறைப்படி, போட்டியாளரின் கட்டுப்பாட்டில், இல்லாமல் இருந்தால் மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

3. கீழ்க்கண்டவைகளுக்காகவும் மதிப்பெண் குறைக்கப்படும்.

1. கத்தாவில் செய்ய வேண்டிய கேட்ச்சிற்கு பதிலாக வேறு கேட்ச்சை மாற்றி செய்தால்

2. நேரடியாக சேஃப்டி நூன்சாக்குவை பிடிப்பதற்கு பதில், உடலில் பட்டு சேஃப்டி நூன்சாக்குவை பிடித்தால்.

3. முழுமையான மற்றும் முறையாக சுவிங் செய்யாமல், அடுத்த டெக்னிக் செய்தால்.

4. இரண்டு கைகளில், பிடித்து, சிங்கில் பஞ்ச் செய்யும் போது சேஃப்டி நூன்சாக்கானது, நேர்க்கோட்டில் இல்லாமல் இருந்தால்.

5. ஸ்டான்ஸ் சரியாக இல்லாமல் இருந்தால்.

## அத்தியாயம் 13. தண்டனைகள் -- போட்டியாளரை தகுதி நீக்கம் செய்யும் முறை

1. ஒரு கத்தாவின் பெயரை கூறிவிட்டு, வேறொரு கத்தா செய்வது.

2. கத்தா செய்யும் போது, சேஃப்டி நூன்சாக்கானது, தரையை தொட்டாலோ அல்லது போட்டியாளர் கையிலிருந்து, நழுவி வீசப்பட்டாலோ, போட்டியாளர் தகுதி நீக்கம் செய்யப்படுவார்.

3. போட்டியாளர் அறிவித்த கத்தாவில் உள்ள டெக்னிக்குளை (அசைவுகளை) செய்யாமல் அல்லது மற்றொரு கத்தாவில் உள்ள டெக்னிக்கை (அசைவுகளை) செய்து, கடைசியில் கத்தாவை முடிப்பது.

4. போட்டியாளர் அறிவித்த கத்தாவில் உள்ள இரண்டு அல்லது மூன்று டெக்னிக்குளை (அசைவுகளை) செய்யாமல் கடைசியில் கத்தாவை முடிப்பது.

5. போட்டியின் போது, சேஃப்டி நூன்சாக்கு அதிகாரிகளையோ அல்லது போட்டியாளர்களையோ அல்லது சேஃப்டி நூன்சாக்கு கலையின் மரியாதையை குலைக்கும் வண்ணம் செய்யப்படும் எந்த செயலையும், ரெஃப்ரி பேனல் தண்டனைக்கு உட்படுத்தும். அம்மாதிரி நடத்தை உள்ள போட்டியாளரை ரெஃப்ரி பேனல் முடிவின்படி, தகுதி நீக்கம் செய்வர்.

## அத்தியாயம் 14. அதிகாரப்பூர்வமான ஆட்சேபனை

1. அளிக்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக, யாரும் ரெஃப்ரி பேனல் உறுப்பினர்களிடம் ஆட்சேபிக்க முடியாது.

2. ரெஃப்ரியின் அணுகுமுறை, விதிகளுக்கு புறம்பானதாக தோன்றினால், அதிகாரப்பூர்வமான பிரதிநிதி மட்டுமே, ஆட்சேபணை செய்ய அனுமதிக்கப்படுவர்.

3. அத்தகைய ஆட்சேபணை எந்த பௌட்டில் ஏற்ப்பட்டதோ, அந்த பௌட் முடிவடைந்த உடனேயே, எழுத்து மூலம் கொடுக்கப்பட வேண்டும். ஆட்சேபணைகள் தயார் செய்யப்படும் பொருட்டு, அடுத்து வரும் மேட்சஸ் அல்லது பௌட்ஸ் தாமதப்படுத்தப்பட மாட்டாது.

4. ஆட்சேபனை செய்பவர், SNWFஆல் ஒப்புக்கொள்ளப்பட்ட கட்டணத்துடன் ஆட்சேபணையை, மேல் முறையீட்டுக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியிடம் கொடுத்தல் வேண்டும்.

5. மேல்முறையீட்டுக்குழு, ரெஃப்ரி குழுவிலிருந்து ஒரு பிரதிநிதியும், தொழில் நுட்பக் குழுவிலிருந்து ஒரு பிரதிநிதியும், நிர்வாக குழுவிலிருந்து ஒரு பிரதிநிதியும் அடங்கியதாக இருக்கும்.

6. ஆட்சேபணையில், போட்டியாளர்களின் பெயர்களும், அதிகாரிகளாய் பங்கேற்ற ரெஃப்ரி பேனல் பெயர்களும், ஆட்சேபணை செய்யப்படும் விஷயத்தின் சரியான விவரங்களும் அடங்கியிருத்தல் வேண்டும். (ஓவர் ஆல் ஸ்டாண்டர்ட் பற்றி, பொதுவான குறைகள், சட்டபூர்வமான ஆட்சேபணைகளாக ஏற்கப்படமாட்டாது) எழுதித்தரப்பட்ட குறைகளின் நியாயத்தன்மையை நரூபிக்க வேண்டியது, ஆட்சேபனை செய்பவரின் பொறுப்பாகும்.

7. ஆட்சேபணைகளுக்கு ஆதரவாக அளிக்கப்படும் சாட்சியங்கள், வீடியோ காட்சிகள் ஆட்சேபணை மேல் முறையீட்டு குழுவால் பரிசீலிக்கப்படும். மேலும், உண்மைகள் கண்டறியும் வகையில், மேல் முறையீட்டு குழுவால் மற்ற அதிகாரிகளையும் விசாரணை செய்வர்.

8. ஆட்சேபணை உண்மையானது என்று கருதப்பட்டால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இத்தகைய குறைகள் அடுத்து வரும் போட்டிகளிலும் ஏற்படாமல் தடுக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஆட்சேபணைக்கான வசூலிக்கப்பட்ட கட்டணம், திருப்பி அளிக்கப்படும்.

9. ஆட்சேபணை உண்மையானதல்ல என்று மேல் முறையீட்டு குழு தீர்மானித்தால், அது தள்ளுபடி செய்யப்படுவதுடன் ஜாமீன் பணமும் சேஃப்டி நூன்சாக்கு உலக சம்மேளனத்திற்காக, பறிமுதல் செய்யப்படும்.

10. உத்தியோக பூர்வமான ஆட்சேபனைகள் தயார் செய்யப்படும் பொருட்டு, அடுத்து வரும் மேட்சஸ் அல்லது பௌட்ஸ் தாமதப்படுத்தப்படமாட்டாது. போட்டிகள் அதற்கான விதிமுறைகளின்படி நடத்தப்படுவதை உறுதி செய்து கொள்ளவேண்டிய பொறுப்பு மேட்ச் ஏரிய கண்ட்ரோலரைச் சார்ந்தது.